தலைப்பு – 264 யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம்-2024

1 நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 264 – யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.
தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்
1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) மூலதனச் செலவினங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	நல்லூர் பிரதேச செயலகத்தில் 19 வகையான 115 எண்ணிக்கையான ரூபா 239,906 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு நிதியல்லாச் சொத்தாக கணக்கிடப்பட்டிருந்த போதிலும் குறித்த பொருட்கள் மீண்டுவரும் செலவினத் தலைப்பின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.	இந்த பொருட்கள் பாவனைக் காலம் குறைந்தவை மற்றும் பெறுமதி குறைந்தவை என்ற அடிப்படையில் மீண்டுவரும் செலவினத் தலைப்பின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டது.	பொருத்தமான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு நிதிகூற்றுக்கள் திருத்தப்பட வேண்டும்.

(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	03 பிரதேச செயலகங்களுக்கு உரித்தான 14 எண்ணிக்கையான கூட்டுமொத்தம் ரூபா 107,351 பெறுமதியான நிதியல்லாச் சொத்துக்கள் மீளாய்வாண்டு நிதிநிலைமைக்கூற்றில் நீக்கப்பட்டிருக்காமையினால் சொத்துக்களின் பெறுமதி ரூபா 107,351 இனால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது	02 பிரதேச செயலகங்களுக்கான சொத்துக்கள் தற்போது சீர்செய்யப்பட்டுள்ளது. 01 பிரதேச செயலகத்தின் சொத்துக்கள் சீர்செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	பொருத்தமான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும் மற்றும் நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும்.

(ii)	மாவட்டச் செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்கள் ஆகியவற்றுக்கு உரித்தான 132 எண்ணிக்கையான நிலையான சொத்துக்கள் பெறுமதி மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படாமையினால் மீளாய்வாண்டின் நிதிநிலைமைக்கூற்றில் (ACA–P) வெளிப்படுத்தப்பட்ட நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது.	விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டும் இது வரை விலை மதிப்பீடு கிடைக்கப் பெறவில்லை. விலை மதிப்பீடு கிடைக்கப் பெற்றதும் உள்ளடக்கப்படும்.	விலை மதிப்பீட்டு பணிகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் மற்றும் நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதி உரிய கால நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும்.

(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை .	மாவட்ட செயலக பதிவேடுகள் யாவும் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. இற்றைப்படுத்தப்படாத பிரதேச செயலகங்களுக்கு இற்றைப்படுத்துவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	பதிவேடுகளை இற்றைப்படுத்தப்படாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் நிதிப்பிரமாண இல 454(2) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்க கட்டிடங்களிலுள்ள அனைத்து மின்சார உபகரணங்கள் தொடர்பான பொருட் பதிவேடு இற்றைப்படுத்தப்பட வேண்டும்.
(ii)	அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் இல 5.2.1 ஆம் வழிகாட்டி இன் பிரகாரம் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் விலைக்கேள்வி ஆவணங்களை கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.	- மேற்படி -	விலைக்கேள்வி ஆவணங்களை நாளதுவரையாக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் மற்றும் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் இல 5.2.1 ஆம் வழிகாட்டிக்கமைய விலைக்கேள்வி இற்றைப்படுத்தப்பட வேண்டும்.
(iii)	அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2	- மேற்படி -	வருகைப் பதிவேடு பேணாத

	ஆம் வழிகாட்டிக்கமைய பெறுகைக்குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் செயலாளரால் வருகைப் பதிவேடு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை.		உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் மற்றும் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் இல 2.11.2 ஆம் வழிகாட்டிக்கமைய வருகைப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட வேண்டும்.

(ஈ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	03 பிரதேச செயலகங்கள் அமைந்துள்ள காணியானது நாளதுவரை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் காணியின் பெறுமதியாக ரூபா 137,878,752 நிலையான சொத்தில் காட்டப்பட்டிருந்தமையினை சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்ததுடன் அக்காணியில் ரூபா 254,917,386 பெறுமதியான கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டிருந்தது.	காணி தொடர்பில் நில அளவைத் திணைக்களம் மற்றும் உரிய அமைச்சுக்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பதில் கிடைத்ததும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்	முறையான வகையில் காணி உரிமையினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(ii)	காரைநகர் பிரதேச செயலகப் பிரிவிற்குள் காணப்படும் வாடிகள் தொடர்பான வருடாந்த அறவீட்டு விபரங்கள் எவையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் காரைநகர் பிரதேச செயலக பிரிவினது வருமான விபரங்களை ஏற்று உறுதிப்படுத்த முடியாதிருந்தது.	வாடிகள் தொடர்பான அறவீட்டு விபரங்கள் யாவும் அறவீட்டு பதிவேடுகள் மூலம் பேணப்படுகின்றன. கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	விபரங்களை சமர்ப்பிக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் மேலும் கணக்காய்வுக்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டு பொருத்தமான முறையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
(iii)	வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட ஒரு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 157 காணி உரிமையாளருக்கான மண் அணைகள், இடிபாடுகள், பற்றைக்காடுகள் அகற்றலுக்கான கொடுப்பனவு ரூபா 4,931,213 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் குறித்த வேலை	நிதியினை வருட இறுதியில் முடிக்கவேண்டியிருந்ததனாலும் காணி உரிமம் தொடர்பாக குறித்த காணி உரிமையினை உறுதிப்படுத்துவதில் பல்வேறு சிக்கல் நிலைமைகள் காணப்பட்டிருந்த நிலையில் அவை படிப்படியாக ஆராயப்பட்டு உரிமம் உறுதிப்படுத்தப்பட்டு தற்போது பயனாளிகளுக்கு சரியான முறையில் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.	தொடர்புடைய ஆதாரங்கள் இல்லாது கொடுப்பனவு செய்யப்பட்டமைக்கும் நிதிப்பிரமாண இல 137, 138, 139 மற்றும் 237அ(i) இற்கமைய செயற்படாமைக்கும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நிறைவடைந்தமை தொடர்பான வேலை நிறைவேற்று அறிக்கை மற்றும் வேலைக் கணியச் சிட்டை என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) இந்த அறிக்கையில் 1.6.1 (ஆ) (ii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கடந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்களின் மீதான பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கடற்றொழில் கட்டளைச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் 337/48 ஆம் இலக்க வர்த்தமாணி மூலம் வெளியிடப்பட்ட 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மாதகல் மீன்பிடி ஒழுங்கு விதி, 1947 ஆம் ஆண்டு 8 ஆம் இலக்க அரச காணி கட்டளைச்சட்டம் மற்றும் உதவி செயலாளர் ஆளுநர் செயலகம், வடக்கு மாகாணம் அவர்களின் 2022.01.26 ஆந் திகதிய G/NPC/AQ/Land/Lease இலக்க கடிதத்தின் பிரகாரம் கரைவலைப்பாடுகளிற்கான வருடாந்த குத்தகைப்பணம் அறவிடப்படவேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தும் 05 பிரதேச செயலகங்களில் 2024 ஆம் ஆண்டு 99 நபர்களிடமிருந்து அறவீடுசெய்யப்பட வேண்டிய குத்தகைப்பணம் கூட்டுமொத்தம் ரூபா 6,498,300 அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	சில நபர்களிடமிருந்து குத்தகைப் பணம் தற்போது அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன் சிலரிற்கு கரைவலைப்பாடுகளிற்கான குத்தகை உரிமப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.	நிலுவையாகவுள்ள வருமானத்தை உரிய நேரத்தில் அறவீடு செய்யாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் மேலும் நிலுவைகள் ஒப்பந்தத்தின் பிரகாரம் அறவீடு செய்ய உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	96/05 ஆம் இலக்க 1996.08.01 ஆந் திகதிய காணி ஆணையாளர் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு அமைய வருடாந்த குத்தகைப்பணம் அறவீடு செய்தலும் அறிக்கைகள்	வல்லிபுரம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினருக்கு நீண்டகால குத்தகையினடிப்படையில் காணியை வழங்கி	குத்தகை விண்ணப்பங்கள் மீது உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படல்

	பேணுதலும் ஏனைய நடைமுறைகளுக்கு அமைவாக 05 பிரதேச செயலகங்களினால் 106 தரப்பினர்களிடமிருந்து குத்தகைக்காக விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று 01 தொடக்கம் 03 வருடங்களாக எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	அதற்கான வருடாந்த குத்தகையை அறவிடுவதற்குரிய ஆவணங்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நீண்டகால குத்தகை தொடர்பான தொடர் நடவடிக்கைகள் பிரதேச செயலாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.	வேண்டும் மேலும் காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் விரைவான செயல்முறையைப் பயன்படுத்தி வருடாந்த குத்தகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	காணி அமைச்சின் குத்தகை அனுமதியின் அடிப்படையில் 07 குடியிருப்பாளர்களுக்கு காணி வழங்கப்பட்டிருந்த போதிலும் குடியிருப்பாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய குத்தகைப் பணம் 01 தொடக்கம் 03 வருடங்களாக அறவிடப்பட்டிருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது.	குத்தகை அனுமதி கிடைத்தவர்களை 2016 - 2025 வரைக்கும் உரிய குத்தகைக் கட்டணத்தை கட்டுமாறு கடிதம் மூலம் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.	உரிய நேரத்தில் குத்திகை வாடகை பணத்தினை அறவீடு செய்யாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் சுற்றறிக்கைக்கமைய குத்தகை பணத்தை அறவீடு செய்ய உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீண்டெழும் செலவினங்களின் 14 செலவு விடயங்களில் 11 சதவீதம் தொடக்கம் 74 சதவீதம் என்ற வீச்சிலான சேமிப்புக்கள் கூட்டுமொத்தம் ரூபா 29,982,000 மூல ஒதுக்கீட்டிலிருந்து வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.	சுற்றறிக்கையின் பிரகாரம் செலவுக்கட்டுப்பாடுகள், உத்தியோகத்தர்கள் சம்பளமற்ற விடுமுறை பெற்றுக்கொண்டமை, எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணச் செலவினங்கள் குறைவடைந்தமை காரணமாக சேமிப்பு ஏற்பட்டது.	மதிப்பீடுகள் முடிந்த வரை துல்லியமாகவும், சாத்தியமாகவும் தயாரிக்கப்பட வேண்டும். மேலும் முறையான வேலைத்திட்டத்தின் மூலம் அபிவிருத்தி மற்றும் மக்களின் நலனுக்காக நிதியை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	07 செலவின விடயங்களுக்கு மூல ஒதுக்கீட்டின் 12 சதவீதம் தொடக்கம் 60 சதவீதம் என்ற	- மேற்படி -	- மேற்படி -

வீச்சிலான கூட்டுமொத்தம் ரூபா 88,691,620 வேறு செலவின விடயங்களிலிருந்து மூல ஒதுக்கீட்டிற்கு மாற்றப்பட்டிருந்தது.

3.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	15 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் ரூபா 43,821,756 இல் ரூபா 40,436,542 மாத்திரம் செலவு செய்யப்பட்டதன் மூலம் நிதியேற்பாட்டிலிருந்து 6 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சளவில் கூட்டுமொத்தம் ரூபா 3,385,334 ஒதுக்கீடு பயன்படுத்தாது திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.	ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினுடைய மீண்டு வரும் செலவின விடயங்களின் கீழான எஞ்சிய ஒதுக்கீட்டை உரிய காலப்பகுதியில் மீளப் பெறுமாறு கோரப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட தவறியமையினால் இது மேலதிகமாக காட்டப்பட வேண்டியிருந்தது.	இப் பகுதியின் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு பெறப்பட்ட நிதியை முறையாகப் பயன்படுத்துவதற்கு ஒரு வேலைத்திட்டம் வகுக்கப்பட வேண்டும். மேலும் அவ்வாறு செய்யத்தவறும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	03 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மூலதன செலவின விடயங்களின் கீழ் மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் ரூபா 920,746,668 இல் ரூபா 645,657,261 மாத்திரம் செலவு செய்யப்பட்டதன் மூலம் நிதியேற்பாட்டிலிருந்து 9 சதவீதம் முதல் 30 சதவீதம் வரையான வீச்சளவில் கூட்டுமொத்தம் ரூபா 275,089,407 ஒதுக்கீடு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.	ஜனாதிபதி செயலகத்தால் அபிவிருத்தி திட்டங்களுக்காக விடுவிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு PS/PIMD/07/01/II ம் இலக்க 28.10.2024ம் திகதிய சுற்றறிக்கைக்கு அமைவாக குறித்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நிறுத்தப்பட்டமையினால் சேமிப்பு ஏற்பட்டது.	- மேற்படி -
(இ)	06 பிரதேச செயலகங்களில் பெண்கள் விவகார அமைச்சின் WA/WB/EEW ஆம் இலக்க 2015.09.03 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் இலங்கையில் விதவைகள் மற்றும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு இயங்கும் பெண்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்காக வழங்கப்படுகின்ற கடனை 03 மாதங்களுக்கு நிவாரண அடிப்படையிலும் மிகுதியினை 12 வாரிக்கையாக பிரித்து வட்டியில்லாமல் அறவிடப்பட	பல பயனாளிகளிடம் நிலுவைகள் முழுமையாக அறவிடப்பட்டுள்ளன. ஏனைய பயனாளிகளிடமிருந்து நிலுவைகள் அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	திட்டத்தை முறையாகக் கண்காணிக்காத மற்றும் உரிய நேரத்தில் கடன்களை அளவீடு செய்யாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மேலும் நிலுவைத் தொகையை அளவீடு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தும் 26 பயனாளிடமிருந்து கூட்டுமொத்தம் ரூபா 263,000 கடன் தொகை கடந்த 03 தொடக்கம் 11 மாதங்களுக்கு மேலாக 2024.12.31 ஆந் திகதி வரை அறவீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		
(ஈ)	03 பிரதேச செயலகங்களில் ஜனாதிபதி செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2018 ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட கிராம சக்தி நவீன தொழில்நுட்பம் - புதிய உற்பத்தியுடைய கிராம சக்தி முயற்சியாண்மையொன்று எனும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 12 கிராம அலுவலர் பிரிவுகளில் வழங்கப்பட்ட 143 எண்ணிக்கையான கடன்களின் கூட்டுமொத்தம் ரூபா 2,692,420 அறவீடு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	- மேற்படி -	-மேற்படி-
(உ)	03 பிரதேச செயலகங்களில் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கடன் பெறும் அங்கத்தவர் சமுர்த்தி வங்கி / வங்கி சங்கங்களில் இருந்து பெற்ற கடனை திருப்பி செலுத்துவதில் தவணை தவறாதவராக இருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 03 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் கடனை பெற்று கடன் தவணை பணத்தினை செலுத்த தவறிய 68 எண்ணிக்கையான அங்கத்தவர்களுக்கு கூட்டுமொத்தம் ரூபா 16,960,000 கடன் வழங்கியிருந்தது.	கடனைப் பெற்று கடனை செலுத்த தவறிய 68 பயனாளிகளது கடனை தவணை தவறாது அறவீடு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	கடன்களை உரிய நேரத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் நிலுவைக் கடன்களை உடனடியாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஊ)	சமுர்த்தி பயனாளிகளின் கட்டாய சேமிப்பு வைப்புப் பணத்தினை பயனாளி முதியவர் ஆகின்ற போது பிரதேச செயலாளரின் அனுமதியுடன் விடுவிக்க முடியும் என குறிப்பிடப்பட்டிருந்தும் 03 பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 04 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளில் 70 வயது தொடக்கம் 95 வயது வரையான 724 எண்ணிக்கையான பயனாளிகளின்	சமுர்த்தி பயனாளிகளின் கட்டாய சேமிப்பு பணத்தினை முதியவர் ஆகின்ற போதிலும் ஏனைய விசேட தேவையின் பொருட்டும் பிரதேச செயலரின் அனுமதியுடன் விடுவிக்கமுடியும். தங்களால் 70 தொடக்கம் 95 வயது வரையான 724 பயனாளிகளின் கட்டாய சேமிப்பு வைப்புக்கள்	உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

கட்டாய சேமிப்பு வைப்புப் பணம் கூட்டுமொத்தம் ரூபா 12,833,416 விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பயனாளிகளின் கோரிக்கைக்கு அமைய விடுவிக்கப்படும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

இல	சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்புகள்	பெறுமதி ரூபா	இணங்காமை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் HAF/1/1/Duty /Vol–II ஆம் இலக்க 2019.11.07 ஆந் திகதிய கடிதம்	-	03 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் 37 உத்தியோகத்தர்கள் மாதாந்த முன்நிகழ்ச்சித்திட்டம், விலகல் மற்றும் தினக்குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	முன்நிகழ்ச்சித் திட்டத்தை சமர்ப்பிக்காத உத்தியோகத்தர்களுக்கு எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.	சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்படாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோஷலிசக்குடியரசின் தாபன விதிக்கோவை அத்தியாயம் XLVIII பிரிவு 13:2, 22:1:1	-	ஏதேனுமொரு துர்நடத்தை தொடர்பான நிகழ்வு பற்றி ஆரம்ப புலனாய்வொன்றினை இரண்டு மாத காலத்தினுள்ளும் விசாரணையை ஆறு மாத காலத்தினுள் பூர்த்தி செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்ததும் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் கடமையாற்றும் 23 உத்தியோகத்தர்கள் தொடர்பில் 11 மாதங்கள் தொடக்கம் 132 மாதங்கள் வரை ஒழுக்காற்று விசாரணைகள்	குறித்த உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக பொது நிர்வாக அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.	சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய விசாரனைகள் விரைவாக நடத்தப்பட்டு முடிக்கப்பட வேண்டும்.

			பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.		
(இ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி நெறி				
	i. பிரிவு 8.9.1(ஆ)	84,601,443	ரூபா 500,000 பெறுமதிக்கு மேற்பட்ட பொருட்கள் கொள்வனவு செய்யும் போது ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 04 பிரதேச செயலகங்களினால் 67 எண்ணிக்கையான பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது ஒப்பந்தம் நிறைவேற்றிருக்கப்பட்டிருக்கவில்லை.	இவ் நடைமுறை பின்பற்றப்பட வேண்டுமென உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.	பெறுகை வழிகாட்டி நெறி பிரிவு 8.9.1(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2009.04.16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை	-	அரச ஊழியர்கள் யாவரும் தமது சேவை நிலையங்களுக்கு உள்வருவதையும் வெளிச்செல்வதையும் விரலடையாளப்பதிவு இயந்திரங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் 03 பிரதேச செயலகங்களில் 56 அலுவலர்கள் 210 சந்தர்ப்பங்களில் கைவிரலடையாளங்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் விரலடையாளப் பதிவு இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படாத நாட்கள் அலுவலரின் தனிப்பட்ட விடுமுறையிலிருந்து ஈடுசெய்யப்படும் என உள்ளக நிலையியற் கட்டளை மூலம் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது	சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயற்படாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(உ)	03/2020 ஆம் இலக்க 2020.12.31 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை	-	வேறு பிரதேச செயலகங்களிலிருந்து 03 பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் பெற்றுவந்த 21 உத்தியோகத்தர்கள் 20 – 69 மாதங்கள் கடந்த நிலையிலும் விதவைகள் / தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு	தற்போது விபரங்கள் பெறப்பட்டுள்ளது பொது நிர்வாக சுற்றறிக்கை 18/2020 இன் பிரகாரம் விபரங்களை	சுற்றுநிருபத்தின் பிரகாரம் சுயவிபரக் கோவைகள் இற்றைப்படுத்தப்பட வேண்டும்.

			விபரமானது முன்னர் கடமையாற்றிய அலுவலகங்களிலிருந்து பெற்று சுயவிபரக்கோவையில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.	வழங்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் இதுவரை பதில்கள் கிடைக்கப் பெறவில்லை.	
(ஊ)	இலங்கை சனநாயக சோஷலிசக்குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு	776,600	மீளாய்வாண்டிற்கான அரச உத்தியோகத்தர் முற்பணக்கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக அறவீடுகள் நிலுவையாகவிருந்த பதவிவெறிதாக்கப்பட்ட, ஓய்வுபெற்ற மற்றும் இறந்த அலுவலர்களிடமிருந்து 03 மாதங்கள் தொடக்கம் 36 மாதங்கள் வரை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	குறித்த உத்தியோகத்தர்களின் கடன் நிலுவையை குறித்த ஊழியர் பணிக்கொடையிலிருந்து சீர்செய்வதன் பொருட்டு ஓய்வூதிய திணைக்களத்திற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. 01 உத்தியோகத்தரின் கடன் நிலுவை பிணையாளியிடமிருந்து பகுதி பகுதியாக அறவீடு செய்யப்படுகின்றது.	நிலுவைகள் உரிய காலப்பகுதியில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.5 வைப்பு மீதிகள்

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்டச் செயலகத்தின் பிடிபண வைப்புக்கள் மற்றும் மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் ஆகியவற்றின் கூட்டுமொத்தம் ரூபா 491,149 நிதிப்பிரமாண இல 571 இற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 04 வருடங்களிற்கு மேலாக வைப்புக் கணக்கில் பேணப்பட்டுவருகின்றன.	குறித்த வேலைத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கான செயற்றிட்டம் 2024.07.02 அன்று விவசாய அமைச்சிற்கு அனுபப்பப்பட்டுள்ளது. திட்டம் நிறைவடைந்ததும் பிடிபணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் முறையான வகையில் வைப்புக்கள் தீர்க்கப்பட வேண்டும்.
(ஆ)	மாவட்டச் செயலகத்தில் செலவின மீளளிப்பாக பெறப்பட்ட வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 20,996,124 உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காது 03 வருடங்கள் தொடக்கம் 07 வருடங்களாக வைப்புக்கணக்கில் பேணப்பட்டு வருகின்றது.	திட்டம் நிறைவு பெற்றதும் வைப்பு கணக்கிலிருந்து பணத்தை மீளளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	திட்டம் முறையான வகையில் முடிக்கப்பட வேண்டும் மற்றும் திட்டமிட்டபடி வைப்புக்கள் தீர்க்கப்பட வேண்டும்.

3.6 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மண் அணைகள், இடிபாடுகள், பற்றைக்காடுகள் அகற்றல் - 2024 வேலைத்திட்டம் இயந்திர மணித்தியாலங்களின் அடிப்படையில் 1440 மணித்தியாலயங்கள் வேலை செய்யப்பட்டதாக ரூபா 10,478,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஆயினும் குறித்த வேலை செய்யப்பட்ட மணித்தியாலங்கள் பிரதேச செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர், தொழில்நுட்ப உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர்களால் உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையினை மாதிரிச் செவ்வை அடிப்படையில் பரீட்சிப்பு செய்த போது கொடுப்பனவு செய்யப்பட்ட மணித்தியாலங்களை கணக்காய்வில் ஏற்று உறுதிப்படுத்த முடியாதிருந்தது.	இவ் வேலைத்திட்டத்திற்காக கிராம மட்ட உத்தியோகத்தர்களுடன் இணைந்த வகையில் அலுவலக உத்தியோகத்தர்களும் கடமையில் ஈடுபட்டனர். குறித்த நாட்களில் வேலை நடைபெற்றது என்பதனை வேலை செய்த காணியின் பரப்பினைக் கருத்தில் கொண்டும் வேலை செய்த மணித்தியாலங்கள் உறுதிப்படுத்தப்பட்டது.	கொடுப்பனவுகளுக்காக போலியான சான்றிதழ்களைச் சமர்ப்பித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	ஜனாதிபதி செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2018 – 2019 காலப்பகுதியில் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கிராம சக்தி நவீன தொழில்நுட்பம் - புதிய உற்பத்தியுடைய கிராம சக்தி முயற்சியாண்மையொன்று எனும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 12 கிராம அலுவலர் பிரிவுகளில் கிராம சக்தி மக்கள் சங்கத்திற்கு வாழ்வாதாரம், ஆற்றல் விருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதி ஆகியவற்றுக்காக ரூபா 10,350,000 நிதி வழங்கப்பட்டிருந்தமை தொடர்பில் 2025.02.28 ஆந் திகதிய கணக்காய்வின் போது 08 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள கிராம சக்தி மக்கள் சங்கங்களினால் வங்கி கணக்கில் இருந்து மீளப்பெறப்பட்டிருந்த போதிலும் மீளப்பெறப்பட்ட ரூபா	கிராம சக்தி சங்கங்களிடம் ஆவணங்கள் பதிவேடுகள், விபரங்கள் காணப்பட்டமையால் பிரிவு உத்தியோகத்தர்களிடமும் கோரிப்பெற்று வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது.	வழிகாட்டிக்கமைவாக உரிய கணக்கு வைப்புக்களையும் சரியான ஆவணப்பராமரிப்புகளையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். மேலும் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் மற்றும் ஏதேனும் நிதி முறைகேடு நடந்திருந்தால் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கெதிராக முறையான நடடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

8,158,613.25 நிதியினை பயன்படுத்தப்பட்ட நோக்கங்கள் தொடர்பான விபரங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் உரிய சங்கங்களிடம் காணப்பட்டிருக்காத போதிலும் இது தொடர்பில் பிரதேச செயலகத்தின் விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களினால் அல்லது கிளைத் தலைவர்களினால் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	10 பிரதேச செயலகங்களில் 2023 ஆம் ஆண்டு நலன்புரி நன்மைகள் கொடுப்பனவிற்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் 319 பயனாளிகளுக்கு 01 தொடக்கம் 24 மாதங்களாக கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.	நலன்புரி நன்மைகள் சபையின் மென் பொருளின் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக இவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை இந்த விடயம் தொடர்பாக நலன்புரி நன்மைகள் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் விரைவாக தொடர்பு கொண்டு குறித்த காலத்திற்குள் நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளை வழங்க ஏற்பாடு செயய்ப்பட வேண்டும்.
(ஆ)	காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தின் 2023/01 ஆம் இலக்க 2023.12.21 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் காணி அனுமதிப்பத்திரம் பெற்றவர்களுக்கும் அளிப்பு பத்திரம் பெற்றவர்களுக்கும் அரச காணிகளில் பூரண உரிமை வழங்கப்படவேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தும் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகங்கத்தினால் 28 பூரண உரிமை பத்திரம் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் 06 மாதங்களாக குறித்த பயனாளிகளுக்கு வழங்கப்படாது அலுவலகங்களில் வைக்கப்பட்டிருந்தன.	காணியில் அபிவிருத்தி செய்து குடியிருக்குமாறு பயனாளிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் குடியிருக்காத காரணத்தால் வழங்குவதற்கு தாமதம் ஏற்பட்டுள்ளது.	முறையான மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்காத மற்றும் உரிமங்களை வழங்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	ஜனாதிபதி செயலகத்தின் PS/PMU/ALLOC/01 ஆம் இலக்க 2024.07.04 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2024 இன் கீழ்	சம்பந்தப்பட்ட இளைஞர் கழகங்கள் 01.08.2024 ஆம் திகதிய கடிதம் மூலம் மாற்றுத்திட்டக் கோரிக்கையை நேரடியாக மாவட்டச்	இளைஞர் கழகங்களுக்கு சரியாக அறிவுறுத்தப்படாத மற்றும்

யாழ்ப்பாண பிரதேச செயலகத்திற்கு 27 இளைஞர் கழகங்களுக்கு தலா 500,000 பெறுமதியான விளையாட்டு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்காக யாழ்ப்பாண பிரதேச செயலலகத்திற்கு ரூபா 13.5 மில்லியன் நிதி ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் 06 இளைஞர் கழகங்களுக்கான ரூபா 3,000,000 பெறுமதியான விளையாட்டுப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.	செயலாளருக்கு முன்வைத்ததன் அடிப்படையில் 21 கழகங்கள் மாத்திரமே விளையாட்டுப் பொருட்களையும் 06 கழகங்கள் விளையாட்டு உபகரணங்கள் தவிர்ந்த ஏனைய பொருட்களைக் கோரியிருந்தனர். உரிய அனுமதி இல்லாததால் அதை வழங்க முடியவில்லை.	எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளை வழங்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தினால் 2021 ஆம் ஆண்டு சௌபாக்கிய உற்பத்தி கிராம திட்டத்தின் கீழ் ரூபா 4,872,142 பெறுமதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட சிங்கநகர் கருப்பட்டடி உற்பத்தி நிலைய செயற்திட்டமானது குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படுத்தப்படாது காணப்படுவதுடன் ஒரு கிராம அலுவலர் அலுவலகம் இயங்கிக்கொண்டிருப்பதனால் குறித்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் நோக்கம் அடையப்பெற்றிருக்கவில்லை.	செயற்றிட்டத்தை முழுமையாக செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன	முறையான மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கை மூலம் திட்டத்தை வெற்றிகொள்ள நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தினால் 2022 ஆம் ஆண்டு மூன்று மில்லியன் கிராமத்துடனான கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு கிராம அலுவலர் பிரிவில் மகளிர் அபிவிருத்தி சங்கத்திற்கு அப்பள உற்பத்தி மற்றும் விற்பனைக்கென ரூபா 320,355 செலவில் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தபோதிலும் நேரடி களப்பரீட்சிப்பு மேற்கொண்ட போது குறித்த திட்டமானது குறிப்பிட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்காததுடன்	தற்போது இச் செயற் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.	-மேற்படி-

	குறித்த செயற்திட்டத்தின் நோக்கம் அடையப்பெற்றிருக்கவில்லை.		
(இ)	மாவட்டச் செயலகத்தினால் 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே இரு வேறுபட்ட அமைச்சுக்களினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடுகளிலிருந்து 2021 ஆம் ஆண்டில் கூட்டுமொத்தம் ரூபா 196,039,247 கிரயத்தில் மாவட்டச் செயலகத்தினால் பராதீனப்படுத்தப்பட்டிருக்காத காணியில் நிர்மானிக்கப்பட்டிருந்த மட்டுவில் பொருளாதார மத்திய நிலையம் நாளதுவரை மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டிருக்கவில்லை.	குறித்த பொருளாதார மத்திய நிலையமானது விசேட சுற்றறிக்கைக்கு அமைய வர்த்தக வாணிப உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டு மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.	இந்த திட்டங்கள் திறக்கப்பட்டு அப் பகுதிக்கு நன்மைகளை வழங்கும் வகையில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு இணைக்கப்பட வேண்டும்.
(ஈ)	மாவட்டச் செயலகத்தினால் நீர்வேலி வாழைக்காய் சிப்ஸ் உற்பத்தி செயற்திட்டத்திற்குத் தேவையான கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் 2020 யூன் மாதத்தில் நிறுவப்பட்டு நீர்வேலி வாழைக்காய் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனை கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டன. அன்று முதல் இன்று வரை அந்தச் சொத்துக்கள் அனைத்தும் பயன்படுத்தப்படாமலும், 04 ஆண்டுகளாக முறையான பராமரிப்பின்றியும் உள்ளன. உற்பத்திக் கிரயம் அதிகமாக உள்ளது என்றும், உற்பத்தித் தேவைக்கு இயந்திரம் பொருத்தமற்றது என்றும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்க நிர்வாகம் கருத்து தெரிவித்தது. ஆனால், இந்த செயற்திட்டத்திற்கு செலவிடப்பட்ட ரூபா 10,325,421 தொகை முறையான சாத்திய வள ஆய்வு இல்லாததால் பயனற்றதாகியிருந்தது.	2024 டிசெம்பர் மாதம் தொடக்கம் தனியார் ஒருவருக்கு கட்டிடமானது குத்தகைக்கு வழங்கப்பட்டு சிறிய அளவிலான உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றது.	முறையான ஆய்வு இன்றி உற்பத்திக்கு பொருத்தமில்லாத இயந்திரங்களை வழ்கியது குறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.
(உ)	2018 – 2019 காலப்பகுதியில் ஜனாதிபதி செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 10 பிரதேச செயலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட கிராம சக்தி நவீன தொழில்நுட்பம் - புதிய உற்பத்தியுடைய கிராம சக்தி முயற்சியாண்மையொன்று எனும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒரு கிராம அலுவலர் பிரிவில் உள்ள கிராம	நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அறவிடுவதில் காலதாமதம் ஏற்பட்டது மீளவும் சுழற்சி முறையில் கடன்கள் வழங்கப்பட்டன.	பொருத்தமான கண்காணிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட திட்டங்கள் தொடக்கப்பட்டு எதிர்பார்க்கப்படும் நோக்கத்தை அடைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	சக்தி மக்கள் சங்கத்திற்கு வழங்கப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 72,375,806 பெறுமதியான நிதி குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது 03 மாதங்கள் தொடக்கம் 72 மாதங்கள் வரை வங்கிக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தமையினால் குறித்த செயற்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட நலன் அடையப்பெற்றிருக்கவில்லை.		
(ஊ)	02 பிரதேச செயலகங்களில் 2022 ஆம் ஆண்டு மூன்று மில்லியன் கிராமத்துடனான கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் 2024 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழ் 02 கிராம அலுவலர் பிரிவில் கூட்டுமொத்தம் ரூபா 8,280,000 செலவில் அமைக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த திட்டமானது குறிப்பிட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் குறித்த செயற்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட நலன் அடையப்பெற்றிருக்கவில்லை.	இந்த கட்டடத்தில் வேலையற்ற பெண்களுக்கு தையல் பயிற்சி வழங்கப்பட்டு அதன் மூலம் குழந்தைகளுக்கான ஆடைகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படும் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் பெண் சிறுதொழில் முயற்சியாளர்களது தயாரிப்புக்களும் சந்தைப்படுத்தப்படுகின்றன.	எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைய நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(எ)	தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் 2024 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 30,195,000 ஒதுக்கப்பட்டு ரூபா 30,191,206 செலவு செய்யப்பட்டிருந்தமை தொடர்பில் ஒரு கிராம அலுவலகப் பிரிவின் ராமாவில் இளைஞர் கழகத்திற்கு வழங்கப்பட்ட 12 வகையான 52 எண்ணிக்கையான விளையாட்டுப் பொருட்கள் குறித்த இளைஞர் கழகத்தினால் பயன்படுத்தப்படாது பாடசாலையொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது.	தற்போது விளையாட்டு பொருட்கள் அனைத்தும் மீளப் பெறப்பட்டு இராமாவில் இளைஞர் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.	நன்மைகளை வழங்க தேவையில்லாத இளைஞர் கழகங்களை அடையாளம் காணும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஏ)	பெண்கள் விவகார அமைச்சின் WA/WB/EEW ஆம் இலக்க 2015.09.03 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் 03 பிரதேச செயலகங்களில் விதவைகள் மற்றும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு இயங்கும் பெண்களின் வாழ்வாதாரத்தினை	இனிவரும் காலங்களில் பொருத்தமான பயனாளிகளைக் கண்டிறிந்து மிக விரைவாகக் கடனை வழங்குவதற்குச் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	கடமைகளை உற்சாகமாக செய்யாத பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

உயர்த்துவதற்காக, வட்டியில்லா கடன் மற்றும் வட்டியுடனான கடன் வழங்குவதற்கான நிதியாக ரூபா 867,395 கடந்த 09 மாதம் தொடக்கம் 17 மாதங்களாக உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது வங்கி கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

4.3 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்பட்டிருக்காமை.

(அ)	தேனீ வளர்ப்பு திட்டத்தின் கீழ் மாவட்டச் செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி தேனீக் கொலனிகளை (Bee colonies) கொள்வனவு செய்யக் கட்டளைகள் அனுப்பப்பட்ட போதிலும், ஒப்பந்ததாரர் ஒப்பந்தக் காலத்தில் ரூபா 196,710 பெறுமதியான தேனீக் கொலனிகளை வழங்கவில்லை. ஒப்பந்தப்படி செயல்படாத ஒப்பந்ததாரரின் ரூபா 165,625 பெறுமதியான செயல்திறன் பிணையை (Performance bond) பணமாக்க ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.	திட்டம் முடிந்ததும் பிணைகள் திருப்பித் வழங்கப்பட்டன. இது கூட்டுறவுத் துறையின் கீழ் உள்ள ஒரு திட்டமாகும். இதைச் சரியாகச் செயல்படுத்துமாறு வட மாகாண பிரதம செயலாளருக்கு மாவட்டச் செயலாளர் கடிதம் அனுப்பியுள்ளார்.	எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைவதற்காகச் செயல்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் கடுமையான மேற்பார்வையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4.4 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

	கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	திருநெல்வேலியில் பால் பதனிடுதல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான தொழிற்சாலை நிர்மானம் மற்றும் பதனிடல் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக தனியார் ஒப்பந்தக்காரருடன் கூட்டுமொத்தம் ரூபா 56,640,750 ஒப்பந்தக் கிரயத்தில் 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கைக்கு அமைவாக மாவட்ட செயலாளரினால் கூட்டுமொத்தம் ரூபா 4,911,486 கொடுப்பனவு செய்யப்படடிருந்த போதிலும் நாளதுவரை தேவைப்படுத்தப்பட்ட பிரதானமான உபகரணங்கள் ஒப்பந்தக்காரரினால்	இந்த செயற்திட்டமானது கூட்டுறவுத் துறையின் கீழேயே உள்ளது. எனவே இச் செயற்திட்டத்தை தொடர்ந்து செயற்படுத்துமாறு ஏற்கனவே மாவட்ட செயலாளரினால் வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.	-மேற்படி-

பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காமை யினால் இச் செயற்பாடுகள் கைவிடப்படடிருந்தன. எவ்வாறாயினும் செயலாற்றல் பிணை முறி ரூபா 4,822,238 காசாக்கப்பட்டு அரசிறைக்கு செலவு வைக்க மாவட்டச் செயலாளரினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.5 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	யுத்தம் காரணமாக உள்நாட்டிலிருந்து இடம்பெயர்ந்து மீளகுடியேறிய மக்களில் மிகவும் வறிய வீட்டுத்திட்ட பயனாளிகளின் வீட்டிற்கு இலவசமாக மின்சார இணைப்பு வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டு பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட 321 பயனாளிகளிற்கான (புதிய இணைப்புகள் மற்றும் நகர்த்தல்) கொடுப்பனவாக கூட்டுமொத்தம் ரூபா 11,362,171 பெறுமதியான நிதி மாவட்ட செயலகத்தினால் இலங்கை மின்சார சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டு 04 மாதங்கள் கடந்த நிலையிலும் நாளதுவரை மின்னிணைப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.	பயனாளிகளுக்கு மிக விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கை எடுப்பதாக மின்சார சபையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	முறையான கண்காணிப்பு மற்றும் பின் தொடர் நடவடிக்கை மூலம் மக்களிற்கு நன்மைகளை வழங்க நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	மீள்குடியேற்ற மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சினால் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டுவரை வழங்கப்பட்ட 1.0 மில்லியன் மற்றும் 0.6 மில்லியன் வீட்டுத்திட்ட பயனாளிகளில் 498 எண்ணிக்கையான 1.0 மில்லியன் வீட்டுத்திட்ட பயனாளிகள் மற்றும் 60 எண்ணிக்கையான 0.6 மில்லியன் வீட்டுத்திட்ட பயனாளிகள் ஆகியோர்களின் வீட்டுத்திட்ட வேலைகள் நாளதுவரை முழுமையாக நிறைவுசெய்யப்பட்டிருக்காதபோதிலும் கொடுப்பனவுகள் முழுமையாக அவர்களது சொந்த வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்பட்டு பணம் மீளப்பெற முடியாதவாறு கூட்டுமொத்தம் ரூபா 88,056,000 நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.	விடுவிக்கப்படாத பயனாளிகளின் வேலைகளை விரைவாக முடிவுறுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. வேலைகள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் நிதி முழுமையாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	முழுமையாகக் கட்டிமுடிக்கப்படாத வீடுகளுக்குப் பணத்தை விடுவித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	தென்மராட்சி பிரதேச செயலகத்தில் 08 பயனாளிகளுக்கு 27 எண்ணிக்கையான தேனீக்கூட்டங்கள் விநியோகிக்கப்பட்டதாக மாவட்டச் செயலக விவசாயத்திணைக்கள உத்தியோகத்தர்களால் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு பயனாளிகளின் கையொப்பம் பெறப்பட்டிருந்தபோதிலும், குறித்த	குறித்த காலப்பகுதிக்குள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த தேனீக் கூட்டங்கள் பெறப்பட்டு விநியோகம்	முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும். ஒழுங்கற்ற முறையில் செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

பயனாளிகளின் வீட்டிற்கு நேரடி களவிஜயம் செய்யப்பட்டது. மேற்கொண்டிருந்த போது தேனீக் கூட்டங்கள் விநியோகிக்கப்படாது 8 பயனாளிகளுக்கு 27 எண்ணிக்கையான தேனீக்கூட்டங்களுக்கான பணமாக கூட்டுமொத்தம் ரூபா 67,230 ஒப்பந்ததாரரினால் மீள வழங்கப்பட்டிருந்தமை பயனாளிகளினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.		மற்றும் ஒப்பந்ததாரருடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.6 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்.

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மாவட்ட செயலகத்தினால் 2019 ஆம் ஆண்டு கூட்டுமொத்தம் ரூபா 75,323,600 கிரயத்தில் நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டிய சுன்னாகம் மலக்கழிவு மீள் சுழற்சியிடல் செயற்திட்ட வேலைகளுக்குரிய ஒப்பந்தக்காரருக்கு நாளதுவரை கூட்டுமொத்தம் ரூபா 65,955,381 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தும் நாளதுவரை வேலைத்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.	உள்ளூராட்சி திணைக்களம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையிற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) கையெழுத்திடப்படுதல் வேண்டும். மேலும் உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து மேற்படி செயற்றிட்டத்திற்குரிய கூறு விலை கோருவதற்கான வரைவு கூறு விலைப் பத்திரம் (Draft bidding Document) கிடைக்கப்பெற்றுள்ளது.	சம்பந்தப்பட்ட பொறுப்பு வாய்ந்த திணைக்களங்கள் அவசரமாக ஒருங்கிணைந்து திட்டத்தை முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	தேனீ வளர்ப்பு உபகரணங்கள் மற்றும் தேனீக்கூட்டங்கள் (Colony) விநியோகிக்கப்பட்ட 51 பயனாளிகளில், மாதிரிச் செவ்வை அடிப்படையில் பயனாளிகளின் வீட்டிற்கு நேரடி கள பரீட்சிப்பின் போது 48 பயனாளிகளின் வீட்டில் தேனீ வளர்ப்பு உபகரணங்கள் மாத்திரம் காணப்பட்டிருந்தபோதிலும் தேனீக்கூட்டங்கள் (Colony) காணப்பட்டிருக்காமையினால் ரூபா 1,656,250 செலவில் நடைமுறைப்படுத்தப்பட்ட குறித்த திட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன் அடையப்பெற்றிருக்காமையானது நிதி விடுவிக்கப்பட்டும் செயன்முன்னேற்றம் அடையப்பெறாத திட்டமாக அவதானிக்கப்பட்டிருந்தது.	இயற்கைச் சூழலின் பாதிப்பு காரணமாக தேனீக்களின் கொலனியானது வேறு இடங்களுக்கு கலைந்து விட்டமையினால் அதன் பிரதிபலனை பயனாளிகளால் தற்போது பெற்றுக்கொள்ள முடியவில்லை. எனினும் எமது உத்தியோகத்தர்கள் உரிய தேனீக்கள் கொலனிகளைப் பெற்று செயற்பாட்டினைத் தொடர்வதற்குரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.	திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகளை அடையப் திட்டத்தை வழிநடத்தாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.7 பெறுகைகள்

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி நெறியின் 5.3.1(ஈ) இன் பிரகாரம் வரைவு விலைக் கேள்வி ஆவணத்திற்கு பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மாவட்டச் செயலகத்தினால் அவ்வாறு பெறப்படாது 35 எண்ணிக்கையான ரூபா 221,342,507 பெறுமதியான திட்டங்களுக்கான பெறுகை நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	பெறுகை வழிகாட்டி நெறி 5.3.1(ஈ) இன் பிரகாரம் தேசிய பெறுகை முகவர் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மாதிரி நியம விலைக்கேள்வி ஆவணங்கள் சிறிய மாற்றங்களுடன் பயன்படுத்தப்பட்டன.	பெறுகை வழிகாட்டி நெறியின் வழிகாட்டல்களுக்கு எதிராக செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	மாவட்ட செயலகத்தினால் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி நெறியின் 6.3.6 இன் பிரகாரம் ரூபா 32,029,278 பெறுமதியான 07 பெறுகை நடைமுறைகளின் போது கேள்வி திறத்தல் அறிக்கை (Format for Bid opening minutes) தயாரிக்கப்பட்டிருக்காததுடன் 07 ஒப்பந்ததாரரினால் வழங்கப்பட்ட விலைக்கழிவு (Discount Offered) விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்காமையினால் விலைக்கேள்வி மதிப்பீட்டில் (Bid Evaluation) விலைக்கழிவு குறிப்பிடப்பட்டிருந்ததன் உண்மைத்தன்மையினை உறுதிப்படுத்த முடியாததுடன் பெறுகை நடைமுறையின் மதிப்பீட்டு, தெரிவு நடவடிக்கை முறையில் வெளிப்படையான தன்மையினையும் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.	கேள்வி திறத்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் விலைக்கேள்வி மதிப்பீட்டில் விலைக் கழிவு வேறாக குறிப்பிடப்படாது விலைக் கழிவுடனனான பெறுமதியே குறிப்பிடப்பட்டிருந்தது. தற்பொழுது குறித்த மாதிரியின் பிரகாரம் குறிப்புக்கள் எனும் நிரல் இணைக்கப்பட்டு அதில் விலைக்கழிவு விபரம் குறிப்பிடப்படுகின்றது.	முறையான விசாரனை நடத்தப்பட வேண்டும் மற்றும் ஏதேனும் முறைகேடு நடந்திருந்தால் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட 05 கிராம அலுவலர் பிரிவில் 157 காணி உரிமையாளர்களிற்கு காணிகள் பெறுகை நடைமுறை பின்பற்றப்படாது ரூபா 5,029,838 செலவு செய்யப்பட்டு மண் அணைகள், இடிபாடுகள், பற்றைக்காடுகள் அகற்றப்பட்டிருந்தது.	மாவட்டசெயலகத்தினால் வழங்கப்பட்ட மதிப்பீட்டுக்கு அமைவாக உரிமையாளரின் காணியின் அளவிற்கு ஏற்றவகையில் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.	பெறுகை நடைமுறை யினை பின்பற்றாமைக்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஈ)	மண் அணைகள், இடிபாடுகள், பற்றைக்காடுகள் அகற்றல் - 2024 வேலைத்திட்டத்திற்கான வழங்குநரை தெரிவு செய்வதற்கான பெறுகை நடைமுறைகள் மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு மூன்று வழங்குநர்கள் தெரிவுசெய்யப்பட்டு மாவட்டச் செயலாளரால் மூன்று வழங்குநர்களுக்குமான வேலை வழங்கல் கடிதம் வழங்கப்பட்டிருந்த போதிலும் பிரதேச செயலாளரினால் இணைத்து வேலைகளுக்கும் ஒரு வழங்குநருடன் மாத்திரம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ரூபா 10,478,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையானது மாவட்ட செயலக பெறுகைக்குழுவின் தீர்மானத்திற்கு மாறான விடயமாக அவதானிக்கப்பட்டிருந்தது.	தெரிவு செய்யப்பட்ட மூன்று வழங்குனர்களில் குறித்த S.K Construction வழங்குனர் காட்டினைத் துப்பரவு செய்வதற்கு பொருத்தமான இயந்திர வளங்களைக் கொண்ட வழங்குனராக இனங்காணப்பட்டமையாலும் குறித்த வேலையினை விரைவாக முடிப்பதற்காகவும் அவருக்கு வேலை வழங்கப்பட்டது.	பெறுகை நடைமுறையை மீறியமைக்காக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	02 பிரதேச செயலகங்களில் 34 எண்ணிக்கையான சொத்துக்கள் பயன்படுத்தப்படாது, பழுதடைந்து காணப்படுகின்றமை தொடர்பில் திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பல சொத்துக்கள் திருத்தம் செய்யப்பட்டு பயன்படுத்தப்படுவதுடன் ஏனையவை வருடாந்த பொருட்கணக்கெடுப்பு சபையின் அறிக்கையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.	திருத்தம் செய்யக் கூடிய சொத்க்கள் திருத்தம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். பயன்படுத்த முடியாத சொத்துக்கள் முறையான வகையில் அகற்றப்படல் வேண்டும்.
(ஆ)	04 பிரதேச செயலகங்களினால் 08 எண்ணிக்கையான காணிகள் பயன்படுத்தப்படுகின்றபோதிலும் குறித்த காணிகளினை உரித்தாக்குவதற்கு 04 தொடக்கம் 12 வருடங்களாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	காணி சுவீகரிப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	பயன்படுத்தப்படும் காணிகளின் உரிமை விரைவான செயன்முறை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

4.9 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப்பிரமாணம் 880 மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜங்க அமைச்சின் 04/2022 ஆம் இலக்க 2022.03.16 ஆந் திகதிய சுற்றறிக்கை ஆகியவற்றின் பிரகாரம், பிணைப்பணம் செலுத்த வேண்டிய உத்தியோகத்தர்கள் கடமையினைப் பொறுப்பேற்று 03 மாதங்களுக்குள்	பல உத்தியோகத்தர்களின் பிணைப்பணம் வைப்புச்செய்யப்பட்டுள் ளது. ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வைப்பு செய்ய நடவடிக்கை	சுற்றுநிருபம் மற்றும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பிணைப்பணம் அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

	பிணைப்பணத்தினை வைப்புச் செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தும் வலிகாமம் தெற்கு பிரதேச செயலக 06 உத்தியோகத்தர்களினால் பிணைப்பணம் வைப்புச் செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டிருந்தது.	எடுக்கப்பட்டுள்ளது.	

4.10 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மாவட்டச் செயலகத்தினால் போட்டோ கொப்பி பேப்பர்கள் கொள்வனவு செய்வதற்காக பிரதேசசெயலகங்களிடம் இருந்து தேவையான போட்டோ கொப்பி பேப்பர்கள் விபரங்கள் காலத்துக்குக் காலம் சேகரிக்கப்பட்டு கூறுவிலை கோரப்பட்டு கூறுவிலைக்கான தீர்மானங்கள் கோரிக்கை சமர்ப்பிக்கப்படுகின்ற பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் மாவட்டச் செயலக கூறுவிலையினை விட ரூபா 368,252 அதிகமாக செலுத்தப்பட்டு 09 பிரதேச செயலகங்களினால் போட்டோ கொப்பி பேப்பர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.	அதிகரித்த திட்ட வேலைகள் காரணமாக மேலதிக Photo copy Paper தேவை ஏற்பட்டதன் காரணமாக அந்தந்த பிரதேச செயலகங்களில் கூறுவிலை கோரப்பட்டு மேலதிகமாக கொள்வனவு செய்யப்பட்டது. கொள்வனவு தொகை குறைவாக இருந்தமையினால் வழங்குனரின் விலையில் சிறு வித்தியாசம் ஏற்பட்டது.	மேலதிகமாகச் செலுத்தப்பட்ட நிதியைச் சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்ய முறையான விசாரணை நடத்தப்படல் வேண்டும்.
(ஆ)	மாவட்டச் செயலகத்தினால் ரோனர்கள் கொள்வனவு செய்வதற்காக கூறுவிலை கோரப்பட்டு கூறுவிலைக்கான தீர்மானங்கள் கோரிக்கை சமர்ப்பிக்கப்படுகின்ற பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் மாவட்டச் செயலக கூறுவிலையினை விட ரூபா 167,255 அதிகமாக செலுத்தப்பட்டு 06 பிரதேச செயலகங்களினால் 84 ரோனர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. விபரம் வருமாறு.	அதிகரித்த திட்ட வேலைகள் காரணமாக மேலதிக ரோனர்களின் தேவை ஏற்பட்டதன் காரணமாக ரோனர்கள் கொள்வனவு செய்யப்பட்டது. கொள்வனவு தொகை குறைவாக இருந்தமையினால் வழங்குனரின் விலையில் சிறு வித்தியாசம் ஏற்பட்டது.	-மேற்படி -

4.11 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் இடமாற்றம் பெற்று பிரதேச செயலகத்திற்கு இணைக்கப்பட்ட 02 உத்தியோகத்தர்களது	சுய விபரக் கோவைகளை பெற சம்பந்தப்பட்ட திணைக்களங்களிற்கு கடிதங்கள் அனுப்பி	சுயவிபரக் கோவைகளை பெற உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்காத அலுவலர்களுக்கு எதிராக

சுயவிபரக்கோவைகள் முன்னைய சேவை நிலையத்திலிருந்து கடந்த 16 தொடக்கம் 42 மாதங்களுக்கு மேலாக பெற்றுக்கொள்ளப்படவில்லை.	வைக்கப்பட்டுள்ளது.	நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

5. **மனித வள முகாமைத்துவம்.**

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நான்கு நிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2061 ஆக காணப்பட்டிருந்தபோதிலும் உள்ளபடியான பதவியணியினர் 2720 ஆக காணப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் 207 வெற்றிடங்களை நிரப்புவதற்கோ மற்றும் ஆரம்ப, இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட அலுவலர்களில் காணப்பட்ட 866 மிகையாளணியினர் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	வெற்றிடங்கள் குறித்து அமைச்சுக்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவற்றை நிரப்ப இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மிகையாகவுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர். 04 கிராம அலுவலர் பதவிகள் இதுவரை நிரப்பப்பட்டுள்ளன.	தேவையான வெற்றிடங்களை மட்டும் நிரப்ப ஊழியர் மீளாய்வு நடத்தப்பட வேண்டும், மேலும் மிகை ஊழியர்கள் குறித்து அமைச்சுடன் கலந்துரையாடி வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு அவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.